தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 பிப்ரவரி 19, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

துணை மின் நிலையம்

***11762—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதிக்கு, 25 கி.மீ. தொலைவிலுள்ள அந்தியூர் 110/22 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை. எதிர்வரும் காலங்களில், அவசியம் ஏற்பட்டால், அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழமான கிணற்றில் நீர் இறைக்க நீளமான கயிறு வேண்டும்; அமைதியான நாட்டை உருவாக்க அறிவுள்ள தலைவர் வேண்டும் என்ற கூற்றுக்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியின் வளர்ச்சிக்காக வைக்கும் அனைத்துக் கோரிக்கைகளையும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று வித்தியாசம் பார்க்காமல், கனிவுடன் பரிசீலித்து, நிறைவேற்றிக் கொடுத்து, சனாதன தர்மத்தோடு, தமிழ்நாட்டின் வளர்ச்சிதான் என் உயிர் மூச்சு என்று 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கும் அன்பே உருவான, அறிவே உருவான, ஆற்றலே உருவான எங்கள் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் பர்கூர் மலைக் கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் 20 ஆயிரம் மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கே வசிக்கும் மக்கள் விவசாயத்தையே

2014 பிப்ரவரி 19]

முக்கியத் தொழிலாகச் செய்து வருகின்றனர். இப்பகுதிக்கு, 35 கி.மீ. தொலைவிலுள்ள அந்தியூர், பச்சாம்பாளையம் என்ற இடத்திலிருக்கும் துணை மின் நிலையம் மூலமாக மின்சாரம் கொண்டு செல்லப்படுகிறது. மின் கம்பிகள் அடர்ந்த காட்டுப் பகுதி வழியாகச் செல்வதால், காற்றடிக்கும்போது பல நேரங்களில் அறுந்து மின்தடை ஏற்படுகிறது. வனவிலங்குகள் நடமாட்டமுள்ள காட்டுப் பகுதியில் உடனடியாக மின் தடையை சரி செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. சிலசமயங்களில் ஒரு வார காலம் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கும்கூட மின் தடை நீடிக்கின்ற நிலைமை உள்ளது. இதனால், இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் படிக்கின்ற மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பர்கூர் மலைப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதி, அந்தியூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்தியூரிலுள்ள துணை மின் நிலையத்தில் 25 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் செயல்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் 50 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றிகளுடன் அந்தத் துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அந்தப் பகுதியின் ஒட்டுமொத்தத் தேவையான உச்ச மின் பளுவே 44 எம்.வி.ஏ.தான். ஆகவேதான், அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான தேவை எழவில்லை. அதோடுமட்டுமல்ல, அந்தப் பகுதியில், மின் பளு குறைகின்ற நேரத்தில், மின்னழுத்தம் குறைகின்ற நேரத்தில், அதைச் சரி செய்வதற்காக 2,500 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் அழுத்த உருக்கி (Voltage Booster) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஆகவே, அங்கு புதியதாக துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியில் மின் தேவை அதிகரித்து வருகின்ற

சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, அப்பகுதி மலைப் பகுதி என்பதால், அங்கு தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொண்டு, மின் பளு தேவை அதிகரித்திருக்குமேயானால், அங்கே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்து, உரிய முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த மலைப் பகுதியிலே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. அங்கே மின் கம்பிகள் அறுந்து விழுகிறதென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். மலைப் பகுதிகளில் சில நேரங்களிலே காற்று வீசுகிறபொழுதும், இயற்கைச்சீற்றங்கள் ஏற்படுகிறபோதும் கடுமையான சூழ்நிலைகளில் எல்லா மலைப் பகுதிகளிலும் மின் கம்பிகள் அறுந்து விழுவது தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. இருந்தாலும், அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றபொழுது, உடனுக்குடன் அதிகாரிகளை அங்கே அனுப்பி அந்தப் பணிகள் சீர் செய்யப்படுகின்றன என்பதையும், அந்தப் பணிகள் தடையில்லாமல் தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையம் அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்து, அமைத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அமைத்துக் கொடுக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்படுகிற நேரத்திலே, மின் கம்பிகளுக்குப் பதிலாக Tower line மூலம் மின்சாரத்தை எடுத்துச் செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tower line அமைக்க வேண்டுமானால், அதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு துணை மின் நிலையத்திலிருந்து மற்றொரு துணை மின் நிலையத்திற்கு மின்சாரத்தை அனுப்புவதற்கு Tower line-ஐ பயன்படுத்துவார்கள். ஆனால், நேரடியாக Tower line-லிருந்து மின் விநியோகம் செய்யப்படுவது வழக்கத்தில் இல்லை. இதில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் எல்லாம் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, Tower line அமைத்து அங்கேயிருந்து நேரடியாக மின் விநியோகம் செய்ய தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அதற்கு வாய்ப்பு இருந்து, தொழில்நுட்ப ஆய்வுகள் நமக்கு சாதகமாக வருமேயானால், அதைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

தேயிலை விற்பனை

***6756—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் இன்ட்கோசர்வ் (Indcoserve) *தேயிலை நிறுவனத்தின் மூலமாக தேயிலை விற்பனையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேயிலை விற்பனையை அதிகரிக்க நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் இன்ட்கோசர்வ் தேயிலை கூட்டுறவு